செய்தி வெளியீடு எண்:349 நாள்: 02.06.2017

## <u>செய்தி வெளியீடு</u>

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, சட்டப் பிரிவு 12 (1) (சி) ன் கீழ் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25 % ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளைச் சேர்க்கை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சேர்க்கைக்கு இணைய வழியாக விண்ணப்பிக்க **20.04.2017** முதல் **26.05.2017** வரைகால அவகாசம் வழங்கப்பட்டது.

சேர்க்கைக்கு மொத்தம் **79842** விண்ணப்பங்கள் இணைய வழியாகப் பெறப்பட்டுள்ளன. இவற்றில் **12017** விண்ணப்பங்கள் ஒரு முறைக்குமேல் (Duplicate) விண்ணப்பிக்கப்பட்டவையாகும். இவை நீங்கலாக **67825** விண்ணப்பங்கள் சேர்க்கைக்குத் தகுதியானவையாகும்.

நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பெறப்பட்ட பள்ளிகளில் **31.05.2017** அன்று குலுக்கல் முறையில் சேர்க்கைக்கான குழந்தைகள் தெரிவு செய்யப்பட்டனர். நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிடக் குறைவாகவோ அல்லது சமமாகவோ விண்ணப்பங்கள் பெறப்பட்ட பள்ளிகளில் பெறப்பட்ட அனைத்துத் தகுதியான விண்ணப்பங்களும் சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்பட்டது.

நுழைவுநிலை வகுப்பில் நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்குச் சமமாகவும், அதைவிடக் குறைவாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்ட **4918** பள்ளிகளில், **28752** இடங்களுக்கு குழந்தைகள் சேர்க்கை வழங்கத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட இடங்களைவிடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பெறப்பட்ட **3036** பள்ளிகளில் குலுக்கல் முறையில் **61039** இடங்களுக்கு குழந்தைகள் சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆக மொத்தம் **7954** பள்ளிகளில் **89791** இடங்களுக்கு குழந்தைகள் சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஒரு சில குழந்தைகள் ஐந்து பள்ளிகள் வரை விண்ணப்பித்துள்ள நிலையில் ஒன்றுக்கும் மேற்பட்ட பள்ளிகளில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்பட்ட குழந்தைகளின் விவரத்தினை www.tnmatricschools.com என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். **05.06.2017**அன்று தெரிவு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு சம்மந்தப்பட்ட பள்ளியில் சேர்க்கை வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட குழந்தைகள் சார்பாக ஆவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்த வேண்டியிருப்பின் அதனை **05.06.2017**க்குள் சம்மந்தப்பட்ட பள்ளியில் அளிக்குமாறு தெரிவிக்கப் படுகிறது. மீதமுள்ள காலி இடங்களுக்கு காத்திருப்போர் பட்டியலில் இருந்து சேர்க்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், இவ்வகைச் சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்பட்ட குழந்தைகள் சார்பாக கல்விக் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை. மாறாக கல்வி கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**